RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# எழுத்திசைக்கும் ஏகலைவி

ரா. பிரபா [அ] *

[அ] தமிழ்த்துறை, சி. கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி, சென்னை, தமிழ் நாடு, இந்தியா.

# Eluthisaikkum Aekalaivi

**R. Prabha** [a, *]

[a] Department of Tamil, C. Kandhaswami Naidu Gents College, Chennai, Tamil Nadu, India

*Corresponding Author:
Prapasairam@gmail.com

Received: 03-12-2025
Revised: 28-02-2026
Accepted: 04-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

It is said that the letter gave shape to the wind, the sound taught the letter to play, and the man who rolled the sound and created the language is called man. Language is one of the greatest inventions created without the impression of mankind. The dimensions of this language are indefinite. One of these forms is literature. Prose by various writers without limitations in the profound thoughts of literature.Articles are composed based on this approach. These articles have been designed as a drain on the field study and as a source of imagination. The purpose of this article is to explore the writing tool of the author Rajam Krishnan who made history in literature and made a revolution in writing in the articles that developed in the world of writing by adapting himself completely in the development of language.

**Keywords:** Ekalavya, Writing, Field Study, Feminist Writer, Maternal Society

## முன்னுரை

மொழி என்பது மனிதனின் உளவியல் உணர்வோடு இரண்டறக் கலந்தது அதிலும் இலக்கிய மொழி என்பது எதார்த்த உலகில் நம்மை ஏகாந்தத்தின் உச்சத்தில் பயணிக்க வைப்பது. இப் பயணத்தின் விளைவே இலக்கியம். இலக்கியத்தில் தொன்மையில் தொடங்கி தற்காலம் வரை பல்வேறு விதமான வடிவங்களில் உள்ளத்தில் போக்குகள் வெளிப்பட்டு நிற்கின்றது இலக்கியம் என்பது பெரும்பாலும் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கையை சித்தரிக்கிறது நாவல், சிறுகதை, கட்டுரை, வானொலி நாடகம் என்று பரந்துபட்ட படைப்புகளில் மக்களின் வாழ்வியலின் இன்பவியல், துன்பவியல் கருத்துக்களையும் மையமாகக் கொண்டு உருப்பெற்றது ராஜம் கிருஷ்ணனின் எழுத்துக்கள். ‘இலக்கிய உலகில் தீராத தாக்கத்தை ஏற்படுத்தி அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்னும் முதுமொழியை உடைத்தெறிந்து’ அடுப்பங்கரையில்தான் அதற்கான விடுதலையும் எழுதப்பட்டது என்று எழுத்துக்களை இசைக்கு இன்பத்தை ஆராய்ந்து இக்கட்டுரை நகருகிறது. ஆண் ஆளுமையுடைய சமூகத்தில் தண்ணியல்பு சிந்தனையையும், சார்ந்த விடயங்களையும், பெண்ணியல் விடுதலை உணர்வையும் மொழியின் வழிநின்று முகிழ்த்த எண்ணங்களை இலக்கிய வழிகாட்டியாக கொண்டு எடுத்துரைத்தவர்கள், பெண்ணிய எழுத்தாளர்கள். எண்ணங்களின் வெளிப்பாட்டு உத்தியும் கள ஆய்வின் கருத்தோட்டங்களையும் களத்தில் நின்று துணிச்சலின் உருவாக, குரலற்றவர்களின் குரலாக அனுபவித்து எழுதியவர் தான் ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன் .சிறுசிறு படைப்புகள் சிறுகதையாக வடிவம் பெற்று நாவலாக உருமாறி எளிய மக்களின் இயல்பு வாழ்க்கை எழுத்துக்களின் வாயிலாக இசை மூட்டிய ஏகலைவிதான் ஆசிரியர் அவரின் எழுத்துக்களில் பட்டுத்தெறிக்கும் ஏழை மக்களின் அவலங்களை ஆயுதமாகக் கொண்டு இவரது படைப்புகள் இலக்கிய உலகில் எல்லோருக்கும் விழிப்புணர்வு உணர்ச்சியை, நயமான எழுச்சியோடும், தர்க்கவாதத்தோடும் முன்வைத்தே இக்கட்டுரை ஆராய்கிறது.

## சமகால சிந்தனைக்கொண்ட எழுத்தாளர்கள்.

அரைநூற்றாண்டு காலத்திற்கு மேலாக எழுத்துலகில் விடுதலையும், தேசபக்தியும் மேலோங்கி நின்ற காலத்தில் இயக்கங்களும், சாதிய ஒழிப்பு, லஞ்ச ஒழிப்பு பெண்ணியல் சிந்தனைகள், பெண்ணிய விடுதலைப் போன்ற பல்வேறு சமூக காரணிகளை முன்னெடுத்து பல்வேறு தரப்பினரும் பேச முற்பட்டனர் இவருடைய காலத்தில் தான் பல்வேறு இனம் சார்ந்த சமூக ஆர்வலர்களும் பெண்ணிய எழுத்தாளர்களும் எழுதுவதற்கு தடை பட்டனர் ஒவ்வொரு கருவூலங்களையும் எழுதுவதற்கு முற்பட்ட போது விழிப்புணர்வு சிந்தனையில் விழித்துக்கொண்டவர் ராஜம் கிருஷ்ணன்.

## எழுத்துக்களின் ஏகாந்தம்

எழுத்து உலகின் மாற்று பரிமாண கோட்பாட்டை கடந்து கன்னித்தமிழ் கடக்கும் போது தற்கால எழுத்தாளர்களின் கைகரம் கொண்டு கடந்தது. இந்த பரிமாணத்தின் பெண்ணிய எழுத்தாளர்களின் ஏகோபித்த ஆதரவும், அன்பும் ஆளுமையும் பெற்று வளமை பெற்றது. இவ்வளமை எழுத்துக்களின் துணைக்கொண்டு இலக்கிய உலகம் ஏகாந்தமடைந்தது இவ் ஏகாந்தத்தின் உச்சமே ஆசிரியரின் எழுத்துக்கள். பெண்ணென்னும் பொதுமைச் பொருளில் புதுமையை எழுத்தாகக் கொண்டு பல்வேறு சொற்கள் பெண்மைக்காக அடையாளமிட்டுள்ளது. இவருடைய படைப்புகள்.

## தாயாண்மை - தந்தைநாயகம்

அதிதி, ஆதித்யர்கள், கிருத்திகா, கார்த்திகேயன் என்ற பெயர்கள் எல்லாம் தாயின் பொருள் கொண்டு வழங்கப்பட்டிருக்கின்றன தாயாண்மை என்ற சொல் ஆதியாக விளங்கிய உலகத்தின் முதல் பவளாக திகழ்ந்த பெண்மையைக் குறித்து நிற்கின்றது பெண்மைக்கு பலவிளிப் பெயர்கள் வட்டமிட்டாலும் பெண்மை பேர் காலத்தை குறித்து பயன்பாட்டில் சுட்டப்படுகிறது. ஆகவே இவ்வுலகம் தந்தை ஆதிக்க நிலை எட்டுவதற்கு முன்பே தாயாண்மை சமூகமாக இருந்தாலும் ஆண் என்னும் சொல்லை தாய் என்ற சொல்லோடு இணைத்து தாயாண்மை சமூகம் என்ற புரட்சி செய்துள்ளார் ஆசிரியர்.

## விருந்தோம்பலும், வேதனையும்

விருந்தோம்பல் என்பது மனித குலத்தின் உறவு நிலையில் அடிநாதமாக விளங்கியது. இதுவும் பெண்ணைச் சுற்றிய சமூகத்தில் பிண்ணப்பட்டுள்ளது. ஆனால் 'பதி' என்ற சொல்லுக்கு தனியாக ஒரு வீடு அமைப்பவன் என்ற பொருளை பதி என்பது உலக வழக்கில் பெண்ணே குறித்து நிற்கும் நிலையில் 'பத்னி' என்பதற்கு பதியை உடைய பெண் 'பதி' என்பது தனிக் குடும்பக்காரன் என்ற பொருண்மையில் தனிக் குடும்பத்தை கூடியவன் பத்னி என்ற பொருளாகிறது.

எனவே தாயாண்மை சமூகம் மாறி தந்தையாதிக்கு சமூகம் நிலைப்பெற்ற பின்னர் ஆண், பெண் உழைப்பில் பிரிவினை அடித்தளம் அமைத்து நின்றது. இப்ப அடித்தளத்தில் பல்வேறு பெயர்கள் எழுத்துக்களால் வடிவமைக்கப்பட்டது. பெண்மைக்கு விருந்து, விருந்தோம்பல் உவந்தளிக்கும் தன்மையைத் தாய்மை சமூகம் கண்டறிந்ததில் விருந்து என்பது அவளே தானமாக வழங்கிய நிற்பது. தந்தை ஆதிக்க சமூகத்தின் மேலாண்மைத்தனத்தால் பொருள் பெற்றது. இச்செயலால் விருந்தோம்பலும் விருந்து இக்கருத்து நிலைகளில் கையாளப்பட்டு இவரது எழுத்துக்கள் புரட்சி செய்துள்ளது.

## தாய்மையின் வீழ்ச்சி

மண்ணுலகம் தாய் இல்லாமல் உலகில்லை தாய் கொல்லப்படும்போது தாய்மையும் கொல்லப்பட்டு வீழ்த்தப்படுகிறது ஆண் நாயக குழுவுக்கு அடிபணிந்த பெண்களை இளங்குமரிகள் கண்ணியர்கள் போன்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்டும், தெய்வமாக அடக்கி வைத்த வரலாற்றை எல்லம்மா என்ற சொல்லாடலை பயன்படுத்தியும் கையாண்டு உள்ளார் தனது படைப்புகளில் மாதங்கி என்ற சொல் தலை இல்லாத பின்டத்தோடு இணைக்கப்பட்ட உடம்பினைக் குறிக்கிறது அநியாய ஆதிக்கத்தை சிந்தனைகளை எதிர்த்து கேள்வி எழுப்பிய சக்தியும், எழுச்சியும் கொண்டவர்களை பாமர மக்களுக்கு தெய்வமாக காட்சியளிக்கின்றன.

ஆகவே தாய்மையின் வீழ்ச்சியைத் தகர்த்தெறிந்த சமூகத்தை இவருடைய எழுத்துக்கள் காட்டுகின்றன எங்கம்மா போகிறாய் என்பதற்கு திரிபு வடிவமே எல்லம்மா என்று பெயர் பெற்றதாக இவருடைய எழுத்துக்கள் பிரதிபலிக்கின்றன.

## தையல்- கல்

அகலியத் தலையில் ராமனின் பாதம்பட மகத்துவமாகி உயிர்பெற்றான் என்பது புராணம். கற்பு நெறி காத்தால் இறந்தபின் வானத்தில் அருந்ததி நட்சத்திரமாய் வளரலாம் இல்லையென்றால் தையல் கல்லால் மாற்றப்படுவாள் என்ற புராணக் கூற்றை சூசகமாக அறிவிக்கும் பொருட்டு இன்றைய திருமணங்களில் அம்மிக்கல் வைக்கப்படுகிறது என்ற கூற்றினை தன் சிந்தனைக்கு சிறப்பான சிந்தனையாகஎடுத்துரைத்துள்ளார்.

## அபாக்கியவாதிகள் -பதிதை

பாக்கியவாதிகள் என்பது நாளொரு பொழுதும் வழக்கில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாடல். ஆனால் எழுத்தாளர் விளம்பரத்தின் ஒளியில் படும் பெண்களுக்கு பக்கத்தில் நிழல் அடையும் இழிவு நிலையும், மன உளைச்சலையும் போலியான பொருளாதாரத்தையும் பளபளப்பையும் கொண்டிருக்கும் பெண்ணை குறிப்பதற்காக அபாயவாதிகள் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார். பதிதை என்னும் சொல்லுக்கு ஆணாதிக்க நாயகருக்கு ஒடுங்காத பெண்கள் பாவி, பலியாகிப்போன பாவி பெண்கள் என்று தனது 8சான்றதாரங்களின் அடிப்படையில் பதிவை என்ற சொல்லுக்கு பொருளை பதிவிட்டுள்ளார்.

## கவி குரல்கள்

பெண்கள் இலக்கண, இலக்கியங்களில் குப்பை என்று தூக்கி எறியப்படும் பெண்மையின் குரல் கவிக்குரல்கள் என்கிறார் எழுத்தாளர். உயர் குடியில் பிறந்த பெண்கள் தான் பண்டைய இலக்கிய முதல் தற்கால இலக்கிய வரை போற்றப்படுகின்றனர் ஆனால் தாழ்ந்த குல பெண்களின் மன உந்துதலின் உணர்வீச்சுகளை சொல்லும் சொற்களை யாரும் பதிய வைக்கவில்லை. ஆண் சந்ததியரை அறிஞர், கவிஞர், வீரர், கலைஞர் என்று போற்றும் சொற்கள் பெண்மையை விதவை, கைம்பெண்,சுமங்கலி வியாபாச்சாரி, வாழாவெட்டி என்று குறிப்பிடுகின்ற தொடர் சொற்களின் உச்சவரம்பில் மேலாதிக்க சமூகத்திற்கு சாட்டையடி கொடுக்கும் இடமாக இடம்பெற்றுள்ளது.

## கருப்பை ஆதிக்கம்

இது ஒரு ஆற்றல் உலகத்தின் இயக்கத்துக்காக இயற்கை அளித்துள்ள ஒரு தன்மை அறிவு சிந்திக்கு மாற்று தனக்கு இருக்கிறது தனக்கு கருப்பை செயல்பாடு ஒன்றுதான் அதை சுற்றி நகர்த்துகிறது என்ற உணர்வில் இருந்து விடுபட வேண்டும் என்ற செய்தியை வலியுறுத்துவதற்காக இச்சொல்லாடலை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். பெண் என்பவள் மகப்பேறு அடைவதற்கும் பிரபஞ்சத்தை இனப்பெருக்கம் செய்வதற்கும் மாற்றாக உருவாக்கப்பட்ட ஒரு சக்தி என்பதை எதிர்த்து சொல்லாட்சி அழுத்தமாக பயணிக்கிறது.

## முடிவுரை

பெண்ணும் பெண்மையும் போற்றப்படும் சமூகத்தில் தந்தை ஆதிக்கம் ஆளுமைமற்ற நிலையிலும் தாயாண்மை சமூகத்தில் வளர்ச்சியூன்றி வளர்ந்துள்ளது. ஈட்டியின் முனையை விட பேனாவின் முனை கூர்மையானது தங்களின் கூர்மையான எழுத்துக்களின் மூலம் சமூக அநீதி, மூடநம்பிக்கைகள் ஒடுக்கு முறைகள் எதிராக குரல் கொடுத்து சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனின் பங்கு அளப்பரியது. பாரதி, பெரியார், அம்பேத்கர், ஜெயகாந்தன் போன்றோரின் வரிசையில் பெண்ணிய விடுதலைக்கு விதைத்தோட்டம் விதைத்தவர் ராஜம் கிருஷ்ணன். வாழ்நாள் முழுவதும் ஒரு விடுதலைப் போராளியாகவே வாழ்ந்து காலந்தோறும்பெண், காலம் தோறும் பெண்மை, இந்திய சமுதாய வரலாற்றில் பெண், பெண் விடுதலை போன்ற தலையங்கங்களில் தலைமைப் புரட்சி செய்தது இவரது எழுத்துக்கள். தாயாண்மை சமூகம் சார்ந்த பல்வேறு சிக்கல்களை அறிவிப்பூர்வமாக, ஆக்க சக்தியாக தீர்வுகளை நோக்கி இவரது எழுத்துக்கள் நகர்த்தின. விதவைப் பெண்களை ஒன்றும் விளையாத தரிசு நிலம்' என்ற கருத்துரைக்கு எதிராக தன் எழுத்துக்களின் மூலம் தரிசுக்கோட்பாடு என்ற தலைப்பில் வினையிலிருந்து வினை கோட்பாட்டை உருவாக்கி எதிர்கால சந்ததியினருக்கு எதிர்நீச்சலை பதியச் செய்தவர். குடும்பம் பதப்படுத்தப்படுகிறது, கல்யாணம் கட்டி இழுக்கிறது கருப்பை ஆதிக்கம் செலுத்துகிறது இதிலிருந்து விடுதலையே உன் சமூக விடுதலை என்ற ஆழமான சிந்தனையில் தனது எழுத்துக்களை பெண்களின் காதுகளுக்கு நீட்டிசைத்துள்ளார். ஆணும் பெண்ணும் இசைந்தொழுகி பாலிக்கும் போது தான் பூரண மகத்துவம் எய்திய சமூகத்தை படைக்க முடியும் என்ற தீர்வினையும் எழுதி இறுதி எழுத்தினைப் பதிவு செய்துள்ளார். தமிழ் இலக்கியத்தளத்தில் ஏழு இசையும் எழுத்தில் கொண்டு எதிர்ப்பினை

புரட்சியாகங்களாய் இமயமாய் நின்று இசைத்த எழுத்துக்களின் ஏகலைவி ராஜம் கிருஷ்ணன் என்று தீர்மானம் கொண்டு முடிவினை அறிவிப்பதே இக்கட்டுரைக்கு பொருத்தமாகும்.

## References

Rajam Krishnan Feminism in Indian Social History, Thagam Publishing House, Chennai (2006).

Rajam Krishnan, Feminist Approaches Tagam Tamil Bookstore, Sarangapani Street, The Nagar Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License